## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 45/2025 |
| Prosecution Witness | : | அ.சா.3 |
| Name | : | பிரியா (கிராம நிர்வாக அலுவலர்) |
| Husband Name | : | உதயசந்திரன் |
| Address | : | களரம்பட்டி |
| Age | : | 31/2025 |

**தேதி : 09.07.2025**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் களரம்பட்டியில் வசித்து வருகிறேன். நான் களரம்பட்டி கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். ஆஜர் இல்லாத எதிரிகளையும் தெரியும். அ.சா.1 மற்றும் அ.சா.2 ஐ எனக்கு தெரியும். கடந்த 08.09.2024ம் தேதி திருகுடமுழுக்கு களரம்பட்டி தேம்பாடி அம்மன் கோவிலில் நடந்தது. கோவிலில் குடமுழுக்கு நடைபெறுவதற்கு முன்பு குடமுழுக்கு அன்று சிறப்பு செய்வதற்காக தேவேந்திரகுல வேளாளர் சமூகத்திலிருந்து கேட்டனர். இது தொடர்பாக வட்டாட்சியர் தலைமையில் அமைதி பேச்சுவார்த்தை நடந்தது. பேச்சு வார்த்தையில் தேவேந்திரகுல வேளாளர் மற்றும் பிற்படுத்தப்பட்ட சமூகத்தினர் இடையே உடன்பாடு ஏற்பட்டு இருதரப்பினரும் கலந்துகொண்டு சிறப்பாக குடமுழுக்கு நடைபெற்றது. தேவேந்திரகுல வேளாளர் சார்பில் எங்களுக்கும் மண்டல பூஜையில் சிறப்பு செய்ய ஒருநாள் கேட்டனர். மீண்டும் ஒருமுறை வட்டாட்சியர் தலைமையில் ஒருமுறை அமைதி பேச்சுவார்த்தை நடந்தது.

பிறகு பேச்சுவார்த்தையில் உடன்பாடு எட்டாதநிலையில் மீண்டும் சார் ஆட்சியர் தலைமையில் நடந்தபோது சார்ஆட்சியர் மண்டல பூஜை நடந்துமுடிந்துவிட்டது. ஆதலால் மீண்டும் ஒருமுறை சிறப்பு பூஜைக்கு அனுமதி அளிக்க முடியாது என்று கூறியுள்ளார். அங்கு தேவேந்திரகுல தரப்பினர் சரி என்று ஒப்புக்கொண்டு சென்றுவிட்டனர். 28.10.2024 அன்று கடைசி நாள் பூஜையாக மண்டல சிறப்பு பூஜை நடந்து முடிந்துவிட்டது. பிறகு சார்ஆட்சியர் பேச்சு வார்த்தை நடத்தும்போது ஒவ்வொரு குடும்பமாக வந்து பூஜையில் கலந்துகொள்ளுமாறும், கும்பலாக வராமல் இருக்க அறிவுறுத்தினார். பிறகு மண்டல பூஜையின் கடைசி தினத்தில் 28.10.2024 அன்று மதியம் 12.00 மணி அளவில் கும்பலாக வந்து தேவேந்திரகுல வேளாளர் தரப்பினர் கோவிலுக்கு சிறப்பு செய்வதற்காக பூஜை பொருட்களுடன் வந்தனர்.

பிற்படுத்தப்பட்டோர் தரப்பினர் ஏற்கெனவே சார் ஆட்சியர் பேச்சுவார்த்தை நடத்தியபோது அவர்களை ஒவ்வொரு குடும்பமாக வந்து பூஜை நடத்துமாறு கூறியுள்ளார் என்றும், இப்போது வேண்டுமென்றே அவர்கள் அனைவரும் வந்துள்ளனர் என்றும் அவர்களை தடுத்து பிரச்சனை செய்தனர். அந்த இடத்திற்கு டி.எஸ்.பி., அறநிலைதுறை உதவி ஆணையர், ஆய்வாளர் மற்றும் அறநிலைதுறை அரசு அலுவலர்கள் ஆகியோர் சம்பவ இடத்திற்கு வந்தனர். பிரச்சனை செய்த பிற்படுத்தப்பட்ட வகுப்பை சேர்ந்த தரப்பினர் ராஜா, நாகராஜ், வினித், சக்திவேல், ராமகிருஷ்ணன், செல்வக்குமார், செல்வராஜ், தமிழரசன், கிருஷ்ணா, வெங்கடேஷ், பிரபாகரன் ஆகிய அனைவரும் ஒன்று சேர்ந்து அநாகரிகமாக எங்களை பேசி எங்கள் பணியை செய்யவிடாமல் தடுத்தனர். இது தொடர்பாக அறநிலையதுறை செயல் அலுவலர் அ.சா.1 காவல் நிலையத்தில் புகார் அளித்தார். போலீஸார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணைக்கு வாய்பளித்தபோதும் குறுக்கு விசாரணை செய்ய வழக்கறிஞர் முன்வராததால் குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்பட்டது.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.